புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திருமதி இரா.தமிழ்ச்செல்வி, B.Sc.,

ந.க.9381/2019/ப2(வளர்ச்சி) நாள்: 28.02.2022

பொருள்: பணியமைப்பு- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு- புதுக்கோட்டை மாவட்டம்- புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்- இளநிலை உதவியாளர்- அ.திலகேஸ்வரன்- 31.10.2019 அன்று பணியிடைக் காலமானது- அவர் மகன் திரு தி.சத்தியமூர்த்தி- வாரிசுரிமை அடிப்படையில்- கருணையடிப்படையில் -- 2019-2020ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின்படி இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கி உத்தரவிடல்.

பார்வை:
1.திரு தி.சத்தியமூர்த்தி, த/பெ.அ.திலகேஸ்வரன் (லேட்) என்பவரின் விண்ணப்பம் நாள்: 17.03.2020.
2.திருமதி தி.கலைச்செல்வி, க/பெ.அ.திலகேஸ்வரன் (லேட்) என்பவரின் விண்ணப்பம் நாள்: 17.03.2020.
3.புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கடிதம் ந.க.அ1/0010/2019 நாள்: 25.11.2019, 18.03.2020 மற்றும் 11.05.2020.
4.அரசாணை எண் 155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு-1)துறை நாள்:10.12.2014.
5.அரசாணை எண் 18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு-1)துறை நாள்:23.01.2020.
6.அரசாணை (நிலை) எண் 48 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை நாள்: 26.08.2021.
7.தொடர்புடைய ஆவணங்கள்.

-0-

உத்தரவு:-

புதுக்கோட்டை மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து 31.10.2019 அன்று பணியிடைக் காலமான அ.திலகேஸ்வரன் என்பவரின் வாரிசுதாரர் மகன் திரு தி.சத்தியமூர்த்தி என்பவர் கருணையடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

கருணையடிப்படையில் பணிநியம்னம் கோரியுள்ள திரு தி.சத்தியமூர்த்தி என்பவர் பார்வை 4 மற்றும் 5இல் காணும் அர்சாணைகளில் குறிப்பிட்டுள்ள அசல் ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார்.

அரசு ஊழியர் இறந்த தேதியிலிருந்து 3 ஆண்டுக்குள் விண்ணப்பம் அளித்துள்ளார்.

Scanned with CamScanner

முதல் வாரிசுதாரராகிய மனைவி தன் மகனுக்கு பணி வழங்கிடக் கோரி விண்ணப்பம் அளித்துள்ளார். இவ்விண்ணப்பங்கள் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து உரிய வழியாக வரப்பெற்றுள்ளது. மேலும் தனியர் கல்வித்தகுதியான 10ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் சமர்ப்பித்துள்ளார். அதன் உண்மைத்தன்மை பெறப்பட்டுள்ளது. அரசு ஊழியர் இறந்த தேதியிலிருந்து 3 ஆண்டுக்குள் 18 வயது பூர்த்தி அடைந்துள்ளார். வாரிசு சான்றிதழ், ஒருங்கிணைந்த சான்று, மற்ற வாரிசுகளின் ஆட்சேபணை இல்லா பத்திரம் ஆகியவைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் இறந்த அரசு ஊழியரின் இறப்புச் சான்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இறந்த அரசு ஊழியருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் ஆவணங்களின் அடிப்படையில் திரு தி.சத்தியமூர்த்தி என்பவருக்கு புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் காலியாக உள்ள ஊர்நல அலுவலர் நிலை-2 பணியிடத்தில் கருணையடிப்படையில் தற்காலிகமாக 19500-71900 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணி நியமனம் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u> :-

அ) இப்பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

ஆ) அரசாணை எண்.33 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்.02.03.2017-ல் தெரிவித்துள்ளப்படி, இவரது தகுதிகாண் பருவக் காலத்திற்குள் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வுகள் மற்றும் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்(ஐந்து ஆண்டுகளுக்குள்)

இ) துறைத் தேர்வுகள் அனைத்தும் மேற்காணும் காலக்கெடுவுக்குள் தேர்ச்சி பெறவில்லையெனில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி எண்.31(4)-ன்படி பணி நீக்கம் செய்யப்படும்.

ஈ) இவர் பணியில் சேரும்போது அரசு மருத்துவ அலுவலரிடமிருந்து உடல் தகுதிச் சான்றுடன் பணியில் சேர வேண்டும்.

உ) இவர் அரசுப்பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் Pay matrix Level.8 வ.எண்.1ன் ரூபாய்.19500/- ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு இதர படிகளுடன் ஊதியம் பெற தகுதியுடையவர் ஆவார்.

ஊ) இவரது பணி பங்களிப்பு ஓய்வூதியத்தின்கீழ் கொண்டுவரப்படுவார். (Contributory Pension Scheme)

Scanned with CamScanner

ஏ) விண்ணப்பதாரரால் கொடுக்கப்பட்ட சான்றுகளும், விபரங்களும் பொய்யானவை என பின்னர் தெரியவந்தால் உடனடியாக எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யப்படுவதோடு வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் இதர படிகளும் திரும்ப பிடித்தம் செய்யப்பட்டு குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் நிபந்தனைகளை உறுதிமொழித்தாளில் 3 நகல்கள் தட்டச்சு செய்து தனியரின் கையொப்பம் பெற்று 2 நகல்களை மாவட்ட ஆட்சியரகத்திற்கு அனுப்பி வைத்திடவும், ஒரு நகலை அலுவலகத்தில் வைத்து பாதுகாக்குமாறும் தொடர்புடைய அலுவலகத் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இவர் அரசு உதவி மருத்துவ அலுவலரிடம் உடற்தகுதி சான்று பெற்று இவ்வுத்தரவு கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் பணியேற்க வேண்டும். இவர் பணியேற்பு செய்தது குறித்த அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு பொன்னமராவதி வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ.) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)
புதுக்கோட்டை.

08/2/22

பெறுநர் :-
திரு தி.சத்தியமூர்த்தி,
த/பெ.அ.திலகேஸ்வரன் (லேட்)
எண் 3/744, கே.கே.நகர்,
மேலமுத்துடையான்பட்டி வழி
வெள்ளனூர் அஞ்சல்,
குளத்தூர் தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.

நகல் :- 1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், பொன்னமராவதி.

2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை-15 அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

ஜிஎஸ்.

Scanned with CamScanner